தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1987, நவம்பர் 17, செவ்வாய்க்கிழமை.

கார்த்திகை 1, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு-2018.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து.”

பொறுத்திருக்கும் காலத்தில் கொக்குப்போல் அமைதியாக இருக்க வேண்டும்; காலம் வாய்த்தபோது அதன் குத்துப்போல் தவறாமல் செய்து முடிக்க வேண்டும்.

1. வினாக்கள்-விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மதுரை, கோவை மாநகர்களில் காவல்துறை ஆணையாளர் நியமனம்.

145—(* வினா எண் 10436) திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை, கோவை மாநகர்களில் காவல்துறை கமிஷனர் நியமனம் செய்ய அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நியமனம் செய்யப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) சென்னையில் உள்ளதுபோல மதுரை நகருக்கும், கோயம்புத்தூருக்கும் காவல் துறை ஆணையர் பதவி ஏற்படுத்துவதற்கான 1987 ஆம் ஆண்டு சென்னை மாநகர் காவல் மதுரை மாநகருக்கும் கோயம்புத்தூர் மாநகருக்கும் நீட்டிப்புச் சட்டம் 23—7—1987 நாளிட்ட அரசிதழில் வெளியிடப்பட்டது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1987 நவம்பர் 17

மேற்படி சட்டம் எந்தத் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்ற அறிவிக்கையினை மாநில அரசு வெளியிட வேண்டும். இதுகுறித்த செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, கோவை போன்ற நகரங்களுக்குக் காவல் துறை கமிஷனர் நியமிப்பது பற்றி அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். அதைத் துரிதப்படுத்துவதோடு, உடனடியாக மதுரை, கோவை போல் சேலம், திருச்சிக்கும் இதுபோன்ற காவல் துறை கமிஷனர்களை நியமிக்கும் குறிப்பு அரசிடத்தில் உள்ளதா? அவற்றிற்கும் பரிந்துரை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, சேலம், திருச்சி நகரங்களுக்கு இந்தகைய செயற்குறிப்பு கிடையாது. மதுரைக்கும், கோவைக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆனால், காவல் துறை ஆணையாளர் போடுவது பற்றி பல்வேறு நிதி வாயில்கள் மற்றும் நிர்வாக முடிவுகளுக்கேற்ப அரசு முடிவெடுக்கும்.

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மதுரைக்குக் காவல் துறை கமிஷனர் அலுவலகம் நியமிக்கப்படும்போது அந்தக் கமிஷனர் அலுவலகத்தினுடைய ஜூரிஸ்டிக்ஷன் லிமிட்டை மேலூர், திருமங்கலம் போன்ற பகுதிகளுக்கும் இணைத்து ஏற்படுத்துவதாகச் செயற்குறிப்பு இருக்கிறதா? அதேபோன்று மதுரை ஊரகத்தினுடைய தலைமையிடத்தைத் தேனிக்கு மாற்ற வேண்டுமென்று ஏற்கெனவே அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அது உடனடியாகச் செயல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இந்தக் காவல்துறை ஆணையாளருடைய வரைவு எல்லை மதுரை மாநகராட்சியின் எல்லைக்குள் அடங்கும் என்று சட்டம் உள்ளது. ஆகவே, மதுரை மாநகராட்சி எல்லைக்குள் வருகின்ற பகுதிகள்தான் அதிலே அடங்கும். தேனிக்கு அலுவலகம் மாற்றப்படுவது குறித்து அரசு ஏற்கெனவே ஆணை இட்டிருந்தால் அது செயல்படுத்தப்படும்.